**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

**முன்னிலை: திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D, C.F.SC,**

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்: 210/2023**

TNCB11-001006-2023

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பழனிக்கவுண்டன் புதூர் (அஞ்சல்), குள்ளக்கப்பாளையம், கதவு எண்.1/79-ல் வசித்து வரும் N.நடராஜ் மகளும், சிவக்குமார் மனைவி சுமார் 28 வயதுள்ள N.கலைச்செல்வி.

...வாதி

**/எதிர்/**

1. கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குரும்பபாளையம் கிராமம், கதவு எண்.1/6 ல் வசித்து வரும் லேட்.நாச்சிமுத்துக்கவுண்டர் மகன் சுமார் 55 வயதுள்ள N.நடராஜ்.

2. கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குரும்பபாளையம் கிராமம், கதவு எண்.1/6 ல் வசித்து வரும் N.நடராஜ் மகளும் மாரிமுத்து மனைவி சுமார் 30 வயதுள்ள N.மஞ்சுளாதேவி. ...பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களை நலந்தகடு கலந்து 3 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் 1 பங்கினை வாதிக்கு ஒதுக்கி ஒரு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், தாவா சொத்தில் உள்ள வாதிக்கு உள்ள பங்கு பாத்தியத்தை மறைத்து பிரதிவாதிகள் தாவா சொத்தை இதர வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்த கூடாது என ஒரு நிரந்திர உறுத்துக்கட்டளை பரிகாரம் உத்திரவிட வழங்கிட கோரியும் மற்றும் தாவா செலவு தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்த நாள்: 01.06.2023

இவ்வழக்கின் வியாஜ்ஜிய மூலம் 18.02.1982, 04.09.2006, 09.10.2017 மற்றும் 14.11.2005 ஆகிய தேதிகளில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், R.பொன்னாபுரம் கிராமத்தில் ஆரம்பம்.

தாவா மதிப்பீடு நீதிமன்ற அதிகார வரம்பிற்கும் முத்திரை தீர்வைக்கும் மதிப்பு ரூ.15,93,750/- வாதிக்கு சேர வேண்டிய 3-ல் 1 பங்கு பாகத்தின் மதிப்பு ரூ.7,43,750/- அதற்காக முத்திரை தீர்வை சட்டப் பிரிவு 37(2)ன் படி ரூ.5,000/-மும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மதிப்பு ரூ.1,000/-க்கு ரூ.30/- மொத்தம் ரூ.5,030/- தமிழ்நாடு நீதிமன்றத் முத்திரை தீர்வை சட்டப்படி செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தாவா மதிப்பு பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| தாவா 1வது அயிட்ட சொத்துக்கு அரசு வழிகாட்டுதலின் மதிப்பு | ரூ.12,75,000/- | |
| தாவா 2 வது அயிட்ட சொத்துக்கு அரசு வழிகாட்டுதலின் மதிப்பு | ரூ.3,18,750/- | |
| தாவா சொத்தின் மொத்த மதிப்பு | ரூ.15,93,750/- | |
| தாவா சொத்துக்களில் வாதிக்கு சேரவேண்டிய 3-ல் 1 பங்கு பாகத்தின் மதிப்பு | ரூ.7,43,750/- | |
| நீதிமன்ற கட்டணம் 37(2)ன் படி | | ரூ.5,000/- |
| தாவா சொத்துக்களை வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்தாமல் இருக்க நிரந்திர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மதிப்பு | ரூ.1,000/- | |
| நீதிமன்ற கட்டணம் 27(c)ன் படி | | ரூ.30/- |
| தாவா மொத்த மதிப்பு | ரூ,7,44,750/- | |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | | ரூ.5,030/- |

இன்று இந்த தாவா என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பிரபு அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.P.காமாட்சிகுமார் அவர்கள் ஆஜராகியும், வழக்குரை நீக்கரவு செய்யப்பட்டதன் படி இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## DECREE

1. that the suit be and the same is hereby plaint is rejected.

2. that there be no order as to cost.

### செலவுத் தொகை பட்டியல்

| வாதி தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|
| - | - |

### சொத்து விபரம்

**அயிட்டம்:1**

முன்பு திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், R.பொன்னாபுரம் கிராமம் கூட்டு பட்டா எண்.25, க.ச. 58/2B நெ. காலையில் பு.ஏ.3.59 க்கு தீர்வை ரூபாய் 4.90 இதில்,

| | |
|---|---|
| சிதம்பரசாமி பங்கு பூமிக்கும் | ...மேற்கு |
| நடராஜ் கிரையம் பெற்ற பூமிக்கும் | ...கிழக்கு |
| மாரிமுத்து பூமிக்கும் | ...தெற்கு |
| தம்பித்துரை என்கிற ராமகிருஷ்ணன் பூமிக்கும் | ...வடக்கு |

இதன் மத்தியில் பு.ஏ.3.00 விஸ்தீரணமுள்ள பூமிக்கு தரம் ரூ.4.09

பின்னும் மேற்படி பூமிக்கு க.ச.54/1A நெ. காலையில் மின் இணைப்பு

எண்.503, 5 HP மின்சார மோட்டார் பம்புசெட் பொருத்தியுள்ள துருஸ்து கிணற்றில் 4/8 பங்கு தண்ணீர் இறைத்துக் கொள்ளும் பாத்தியமும், மின்சார சாதனங்கள், டெபாசிட் தொகையும் சகிதம்.

பின்னும் மேற்படி பின்னும் மேற்படி பூமிக்கு 2,3,4,5 இலக்கமிட்டவர்களின் பங்கு பூமியில் தென்கோட்டில் கிழமேலாக 12 லிங்ஸ் அகலமுள்ள பொது வாகனங்கள், ஆட்கள், கால்நடைகள் சென்று வர உள்ள பாத்தியங்கள் சகிதம். பின்னும் மேற்படி பூமிக்கு பி.ஏ.பி. வாய்க்கால், தண்ணீர் பாத்தியங்களும் சகிதம். மேற்படி 7028/2007 நெ. பாக பத்திரத்தில் பொது ஷராவில் கண்டுள்ளவாறு மேற்படி பூமிகளுக்கு கிணர் மின் மோட்டர் ஆகியவற்றில் இருந்து தண்ணீர் பாய்த்துக் கொள்ளும் பாத்தியமும், போக வர உள்ள போக்குவரத்து தடபாத்தியமும் சகிதம்.

<u>அயிட்டம்: 2</u>

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், R.பொன்னாபுரம் கிராமம் புலத்தில் பட்டா எண்.101, க.ச. 58/2A நெ.காலை புங் ஹெக்.0.93.5 க்கு ஏக்கர் 2.31 க்கு தீர்வை ரூபாய் 3.16 இதில்

| | |
|---|---|
| என் மீது பூமிக்கும் | -வடக்கு |
| க.ச. 57 நெ. காலைக்கும் | -தெற்கு |
| க.ச. 58/1 நெ. காலைக்கும், | |
| க.ச.59/2A நெ.காலையில் என் மீதி பூமிக்கும் | -கிழக்கு |
| க.ச. 58/2B நெ. காலைக்கும் | -மேற்கு |

இதன் மத்தியில் பு.ஏ. 0.75 க்கு தீர்வை ரூ.1.03 இந்த பூமிகள் மட்டும்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் வைக்கப்பட்டுள்ளது.

Sd./M.மணிகண்டன்

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.